

தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி, விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதிகளில் தி.மு.க. வேட்பாளர்களான கா.கருணாநிதி, மார்க்கண்டேயன் ஆகியோருக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார்.அதனைத் தொடர்ந்து அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கோவில்பட்டியில் உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.இந்நிகழ்வில் தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் பெ.கீதாஜீவன், ஜெகன் பெரியசாமி, பீக்கிளிப்பட்டி முருகேசன், ராதாகிருஷ்ணன், இரா.ரமேஷ், கயத்தார் குருராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



அருப்புக்கோட்டை தொகுதி, அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட அண்ணா நகர் வெள்ளக்கோட்டை, காமராஜர் சாலை தெற்கு ரதவீதி கல்பாலம் பகுதியில் தி.மு.க. தெற்கு மாவட்ட செயலாளர் தி.மு.க. வேட்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் வீதி வீதியாகச் சென்று வாக்கு சேகரித்தார். உடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிப்பிப்பாறை ரவிச்சந்திரன், நகர்மன்ற தலைவர் சிவபிரகாசம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுப்பாராஜா, நகர செயலாளர் ஏ.கே.மணி உள்ளனர்.



திருச்சுழி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ந.புதுப்பட்டி, அகத்தாகுளம், நல்லதரை, விடத்தகுளம் புதூர், விடத்தகுளம், மேலேந்தல், அணிக்கலக்கியேந்தல், வேலாயுதபுரம், புளியங்குளம், மிதிலைக்குளம், இலுப்பைகுளம், மைலி, காரேந்தல், நாடாகுளம், அம்பனேரி, கொக்குளம், சூச்சனேரி, பள்ளிமடம், சூச்சனேரிப்பட்டி, பச்சேரி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் கழக வேட்பாளரும் தமிழ்நாடு நிதி அமைச்சருமான தங்கம் தென்னரசுவுக்கு கழக மாற்றுத் திறனாளிகள் அணியின் செயலாளர் பேராசிரியர் தீபக்நாதன், மக்களை நேரில் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். கழக வேட்பாளர் தங்கம் தென்னரசு உடன் இருந்தார்.



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின், கோவில்பட்டி சட்டமன்றதொகுதியின்,வெற்றி வேட்பாளர், கா.கருணாநிதி வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு பிரச்சாரம் செய்தார்.நிகழ்வில் கோவில்பட்டி கிழக்கு நகர கழகச் செயலாளர் சுரேஷ், முன்னாள் நகரச் செயலாளர் ராமர், பொதுக் குழு உறுப்பினர் இரா.ரமேஷ், மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள்,கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி திமுக வேட்பாளர் ஆஸ்டின் நாகர்கோவில் மாநகராட்சி 12 மற்றும் 13 வது வார்டுக்கு உட்பட்ட காந்தி பார்க் சக்தி கார்டன் ஆர் சி பிரதர் தெரு தளவாய் தெரு பெரிய ராசிங்கன் தெரு உள்ளிட்ட பகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார் உடன் மாநகர மேயர் (பொ) மேரி பிரின்சி லதா மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்த் மாவட்ட மாநகர காங்கிரஸ் தலைவர் நவீன் குமார் மண்டல தலைவர் ஜவகர் மாநகர இளைஞரணி அமைப்பாளர் சி டி சுரேஷ் மற்றும் கழகம் முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர், திமுக துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளர் பெ.கீதா ஜீவன், ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் பை.மூ.ராமஜெயம் ஆகியோரை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார்.நிகழ்வில் மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, அகில இந்திய காங்கிரஸ் தேசிய குழு உறுப்பினர் ஏ.பி.சி.வி.சண்முகம், மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன் மற்றும் கூட்டணி கட்சி கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



திருச்சுழித் தொகுதி, நரிக்குடியில் நடைபெற்ற மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிப் பொதுக்கூட்டத்தில், துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. , திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை மக்களிடம் விளக்கி பேசி திருச்சுழித் தொகுதி வேட்பாளர் தங்கம் தென்னரசுக்கு ஆதரவு திரட்டினார். உடன் திருச்சுழி ஒன்றியச் செயலாளர் பொன்னுத்தம்பி இருந்தார்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் சிங்கம்புணரி ஒன்றியத்தில் வாக்கு சேகரித்தார்.



சட்ட மேதை அம்பேத்கர் அவர்களின் உருவப் படத்திற்கு ஒட்டன்சத்திரத்தில் அவரது திருவுருவப்படத்திற்கு அமைச்சர் அர. சக்கரபாணி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் சட்டமேதை அம்பேத்கர் அவர்களின் 136வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அவரது திருவுருவ படத்திற்கு மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார், உடன் கழக நிர்வாகிகள் மூவேந்திரன், ராகவன், ஏ.கே.ஆறுமுகம், ரவீந்திரன், சரவணன் அம்பலம், குரும்பன், அறிவுநிதி, புண்ணியமூர்த்தி, ராதாகிருஷ்ணன், மேலமடை சித்திக், புதூர் வேலு, பாலா, திராவிடமாரி, ராஜேஸ் என்ற பாக்யராஜ், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர் என திரளானோர் பங்கேற்றனர்.



திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் சு.சுப்பிரமணியன் நெல்லை டவுனில் வீடு,வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு தீவிரமாக வாக்கு சேகரித்தார்.நிகழ்வில் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பொன்னையா பாண்டியன்,பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம் மாமன்ற உறுப்பினர் உலகநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.